TNVR070019992019

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை – திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.58/2019

CNR No.TNVR070019992019

--------

ஜெகதீஷ் ... வாதி

/எதிர்/

1. சந்திரபோஸ் (இறப்பு)*
2. சந்தனக்குமார்
3. சார்பதிவாளர்,
சாத்தூர்
4. மாவட்ட பதிவாளர்
விருதுநகர் மாவட்டம்
* 5. தமிழக அரசுக்காக
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர் ... பிரதிவாதிகள்

*Amended as per Order in I.A.No.03/2020 dated 16.03.2020
*Impleaded as per Order in I.A.No.04/2021 dated 12.07.2022
*Amended as per Order in I.A.No.05/2022 dated 19.10.2022

இவ்வழக்கு 05.09.2019 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 31.01.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 3, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2 ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

**தீர்ப்புரை**

தபசில் சொத்தைப் பொறுத்தமட்டில் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் 03.09.2009 ம் தேதி 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் கிரைய ஆவண எண்.8157/2009 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் அதனைத் தொடர்ந்த மற்ற நடவடிக்கைகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்தும், தபசில் சொத்தினைப் பொறுத்து 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 03.09.2009 ம் தேதி ஆவண எண்.8157/2009 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை 3 ம் பிரதிவாதி ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கும் பொருட்டும் செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும், தபசில் சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ, அவர்தம் வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும், எவ்வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாதென ஒரு நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பித்தும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்**:-

தபசில் கண்ட சொத்துக்களும், இதர பிற சொத்துக்களும் ஆதியில் சங்கரப்ப நாயக்கருக்குப் பூர்விகமாகப் பாத்தியப்பட்டு அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் தபசில் சொத்திற்கு தீர்வை முதலியவை செலுத்தி நல்லமுறையில் அனுபவித்து வந்துள்ளார். மேற்படி சங்கரப்ப நாயக்கருக்கும், அவரது மனைவியான கெங்கம்மாளுக்கும் கிருஷ்ணவேணி என்ற மகளும், திருப்பதி என்ற மகனும் வாரிசுகள் அவார்கள். மேற்படி சங்கரப்ப நாயக்கர் உயிருடன் இருக்கும்போது அவரது மகளான கிருஷ்ணவேணிக்கு அதிகப்படியான நகைகள் மற்றும் சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்துள்ளார். சங்கரப்ப நாயக்கர் தனது வாரிசுகளான அவரது மனைவி கெங்கம்மாள் மற்றும் மகள் கிருஷ்ணவேணி மற்றும் மகன் திருப்பதியை தனது வாரிசுகளாக விட்டுவிட்டு சுமார் 30 வருடத்திற்கு முன்பாக இறந்துவிட்டார். மேற்படி சங்கரப்ப நாயக்கர் இறந்தபிறகு அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களில் சிலவற்றை மட்டும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் 1986 ம் ஆண்டிலேயே வாய்மொழியாக பாகம் செய்து கொண்டுள்ளார்கள். அவ்வாறு பிரிவினை செய்ததில், சங்கரப்ப

நாயக்கரின் மனைவியான கெங்கம்மாளின் பாகத்துக்கு தபசில் சொத்துக்களுக்கும், இதர சொத்துக்களும் ஒதுக்கப்ப்டடு அவர் அவற்றை தீர்வை முதலியன செலுத்த நல்லமுறையில் அனுபவித்து வந்துள்ளார். அவ்வாறு அனுபவித்து வந்த தபசில் சொத்தினையும், இதர சொத்துக்களையும் கெங்கம்மாள் தனது மகனான திருப்பதியின் மனைவி சங்கரேஸ்வரிக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.39/1995 ன் கீழ் 20.03.1995 ம் தேதி பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி கெங்கம்மாளின் மகனும், சங்கரேஸ்வரியின் கணவருமான திருப்பதி மேற்படி பவர் பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்தும் செய்துள்ளார். மேற்படி சங்கரேஸ்வரியும் மேற்படி பவரினை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் மேற்படி திருப்பதி இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வந்து தனது மனைவியான சங்கரேஸ்வரியிடம் சண்டை சச்சரவுகள் செய்து வந்ததினால் அவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு திருப்பதி, சங்கரேஸ்வரியை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வந்துள்ளார். மேற்படி சங்கரேஸ்வரியே தனது மகனான வாதியையும், தனத மாமியார் கெங்கம்மாளையும் பராமரித்து வந்துள்ளார். மேலும், சங்கரேஸ்வரி தனது மாமியார் கெங்கம்மாள் கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்தின் ஒரு பகுதியான தபசில் சொத்தினை கடற்கரைராஜ் என்பவருக்கு 23.07.1997 ம் தேதிய சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1770/1997 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் பதிந்து கொடுத்துள்ளார். மேற்படி சொத்தை கிரையம் பெற்ற கடற்கரைராஜ் தபசில் சொத்தினை தீர்வை முதலியவை செலுத்தி எவ்வித வில்லங்கமும் இல்லாமல் நல்லமுறையில் அனுபவித்து வந்து கடந்த 06.09.2010 ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.7847/2010 ன் கீழ் வாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் பதிந்து கொடுத்துள்ளார். மேற்படி கிரையத்தினை ஏற்று வாதியும், தபசில் சொத்தினை நல்லமுறையில் அனுபவித்து வருகிறார். மேலும், வாதி தனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து தீர்வை முதலியவை செலுத்தி அனுபவித்து வருகிறார். அதன் பட்டா எண்.380 ஆகும். மேற்படி வாதியின் தகப்பனார் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து தபசில் சொத்தினை பொறுத்து ஏற்படுத்திய வில்லங்க விபரம் வாதிக்கு தெரிய வந்தது.

வாதியின் தகப்பனார் திருப்பதி குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்ததாலும், குடிக்கு அடிமையாகி இருந்ததாலும் அவர்மூலம் தபசில் சொத்தினை அபகரித்து தபசில் சொத்தினை வில்லங்கம் செய்ய எண்ணி 1, 2 பிரதிவாதிகள் திருப்பதியை ஏமாற்றி திருப்பதி பெயரில் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை வைத்து மோசடியாக 03.09.2009 ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக எண்.8157/2009 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தை மோசடியாக ஏற்படத்தியுள்ளார்கள். மேற்படி கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி சங்கரப்ப நாயக்கரின் மகனும், வாதியின் தந்தையுமான திருப்பதி, அவரது தகப்பனார் சங்கரப்ப நாயக்கர் இறந்த பிறகு அவருக்கும், அவரது தாயார் கெங்கம்மாளுக்கும், சகோதரி கிருஷ்ணவேணிக்கும் இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி நன்கு தெரிந்திருந்தும் தபசில் சொத்து திருப்பதியின் தாயார் கெங்கம்மாளின் பாகத்துக்கு ஒதுக்கப்பட்ட விபரம் தெரிந்தும், மேற்படி கெங்கம்மாள் வாதியின் தாயார் சங்கரேஸ்வரிக்கு 20.03.1998 ம் தேதி ஏற்படுத்திக் கொடுத்த பவர் பத்திரம் பற்றி நன்கு தெரிந்திருந்தும், அவற்றில் சாட்சி கையெழுத்து போட்டிருந்தும் வாதியின் தாயாரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1, 2 பிரதிவாதிகளின் தூண்டுதலின் காரணமாக அவர்களுடன் கூட்டு சேர்ந்து தபசில் சொத்தினை மோசடியாக வில்லங்கப்படுத்தியுள்ளார்.

சங்கரப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் தபசில் சொத்துக்களும், இதர சில சொத்துக்கள் மட்டும் அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் கெங்கம்மாள் பாகத்துக்கு ஒதுக்கப்பட்டு அவர் அவற்றை கெங்கம்மாள் தனது மருமகள் சங்கரேஸ்வரிக்கு பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்த பின்பு மேற்படி சங்கரேஸ்வரி அந்த பவரினை ஏற்று 23.07.1997 ம் தேதியில் கடற்கரைராஜ்க்கு தபசில் சொத்தினை விற்பனை செய்த பின்பு திருப்பதிக்கு தபசில் சொத்தின் மீது எவ்வித உரிமையும், அனுபவமும் ஏற்படாது. அதன்காரணமாக மேற்படி மோசடியாக திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் 03.09.2009 ம் தேதி ஏற்படுத்திய கிரையப்பத்திரத்தினால் வாதியின் கிரைய முன்னோரான கடற்கரையின் உரிமையையும், அனுபவத்தையும் எவ்வகையிலும் பாதிக்காது. அதனடிப்படையில் தபசில் சொத்துக்களின் மீதான வாதியின்

உரிமையையும், அனுபவத்தையும் எவ்வகையிலும் பாதிக்காது. மேற்படி 03.09.2009 ம் தேதி திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அவை வெறிதானது மற்றும் விழலானது ஆகும்.

வாதிக்கு மேற்படி வில்லங்கம் பற்றி தெரிந்ததும், வாதி 1,2 பிரதிவாதிகளிடம் நேரில் சென்று மேற்படி வில்லங்கத்தை ரத்து செய்து கொடுக்க கேட்டபோது 1, 2 பிரதிவாதிகள் மேற்படி வில்லங்கத்தை ரத்து செய்து கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் வாதி 09.12.2017 ம் தேதி மேற்படி 1, 2 பிரதிவாதிகள் திருப்பதியுடன் இணைத்து 03.09.2009 ம் தேதி ஏற்படுத்திய கிரையத்தை ரத்து செய்து கொடுக்க வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார். அதற்கு மேற்படி 21.12.2017 ம் தேதியிட்டு தவறான தகவல்களை கொண்டு 1, 2 பிரதிவாதிகள் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். வாதி தரப்பில் 09.12.2017 ம் தேதியிட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் தட்டச்சு பிழையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தவறுதலை சரி செய்யும்பொருட்டு தேதி Rejoinder அறிவிப்பு ஒன்றும் அனுப்பப்பட்டது. அவற்றையும் பெற்றுக்கொண்டு 1, 2 பிரதிவாதிகள் தபசில் சொத்தினைப் பொறுத்து அவர்கள் திருப்பதியுடன் சேர்ந்து மோசடியாக ஏற்படுத்திய வில்லங்கத்தை ரத்து செய்யும்பொருட்டு அவர்கள் 03.09.2009 ம் தேதி 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் அவர்கள் மோசடியாக ஏற்படுத்திய கிரையத்தை ரத்து செய்ய முன்வராத காரணத்தினால் மேற்படி 03.09.2009 ம் தேதியிட்டு 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.8157/2009 ம் தேதிய கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி 03.09.2009 ம் தேதிய கிரையப்பத்திரத்தினை 3 ம் பிரதிவாதி ரத்து செய்யும்பொருட்டு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கவும், தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும், எவ்வகையிலும் வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாதென பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்</u>**:-

பிராதில் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரங்களுக்கும் 3 பிரதிவாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே பிரதிவாதி அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவு செய்யப்படுகிறது எனவும், மேற்படி வழக்கைப் பொறுத்து 3, 4 பிரதிவாதிகள் தேவையற்ற வழக்கு தரப்பினர் எனவும், 3, 4 பிரதிவாதிகளின் செயல்கள் அனைத்தும் பதிவு சட்டத்தில் கூறப்பட்ட ஷரத்துக்களின் அடிப்படையிலும், பத்திர பதிவுத்துறை தலைவர் அவர்களின் பத்திரப்பதிவுகள் குறித்த அறிவுரைகளின் அடிப்படையிலும் மட்டுமே செய்யப்படுபவை ஆகும். எனவே, வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை 3ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. 03.09.2009ம் தேதியிட்டு 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பதிவு செய்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
2. 3ம் பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
3. 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
4. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) வாதி தரப்பில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் 16வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6) இவ்வழக்கைப் பொறுத்து இவ்வழக்கின் தன்மை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள மூன்று எழுவினாக்களுக்கும் ஒரே நேரத்தில் விடை அளிப்பது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) <u>**எழுவினா 1**</u>:–

03.09.2009 ம் தேதியிட்டு 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பதிவு செய்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

<u>**எழுவினா 2**</u>:–

3 ம் பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரம் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

<u>**எழுவினா3**</u>:–

1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

இவ்வழக்கானது வாதியால் விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) வாதி தரப்பில் தபசில் கண்ட சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் ஆதியில் சங்கரப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. சங்கரப்ப நாயக்கருக்கு கெங்கம்மாள் என்ற மனைவியும், கிருஷ்ணவேணி என்ற மகளும், திருப்பதி என்ற மகனும் வாரிசு ஆவார்கள். சங்கரப்ப நாயக்கர் இறந்தபிறகு அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களில் சிலவற்றை மட்டும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் 1986 ம் ஆண்டு வாய்மொழியாக பாகம் செய்து கொண்டுள்ளார்கள். அவ்வாறு கெங்கம்மாளுக்கு கிடைத்த தபசில் சொத்தையும், இதர சொத்துக்களையும் தனது மகனான திருப்பதியின் மனைவி சங்கரேஸ்வரி என்பவருக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.39/1995 ன் கீழ பதிவு செய்த பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அதில் திருப்பதியும் சாட்சி கையொப்பம் செய்து சங்கரேஸ்வரி அதனை ஏற்றுக்கொண்டுள்ளார். திருப்பதி மற்றும் சங்கரேஸ்வரிக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனித்தனியாக வாழ்ந்து வந்துள்ளார்கள். சங்கரேஸ்வரி தனது மாமியாரான கெங்கம்மாள் கொடுத்த பவர்

பத்திரத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்தின் ஒரு பகுதியான தபசில் சொத்தினை கடற்கரை ராஜ் என்பவருக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1770/97 ன் கீழ் பதிவு செய்த கிரையப்பத்திரம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார். பின்னர் கடற்கரைராஜ் தபசில் சொத்தினை கடந்த 06.09.2010 ம் தேதி வாதிக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.7847/2010 ன் கீழ் பதிவு செய்த கிரையப்பத்திரம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார். அதன்பின்னர் வாதி தனது பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார்.

9) வாதியின் தகப்பனார் திருப்பதி குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்ததால் 1, 2 பிரதிவாதிகள் திருப்பதியை ஏமாற்றி திருப்பதி பெயரில் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை வைத்து மோசடியாக 03.09.2009 ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக எண்.8157/2009 ஐ மோசடியாக ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த விபரத்தை வாதி வில்லங்கச்சான்று பார்த்த போது தெரிய வந்துள்ளது.

10) இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 1 ம் பிரதிவாதி சந்திரபோஸ் இறந்துவிட்டதாக அவருக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பிய சம்மன் மூலம் வாதிக்கு தெரிய வந்தது. தாவா வழக்கில் 1 ம் பிரதிவாதியின் செயல் முற்றிலும் மோசடி நடவடிக்கையாகும். மேற்படியாரின் மோசடி செயலுக்கு அவர் மட்டுமே தனிப்பட்ட பொறுப்பு ஆவார். அவர் வாரிசுகள் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள். தாவா வழக்கில் 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என வாதி தரப்பில் சீர்திருத்த பிராது சொல்லப்பட்டுள்ளது.

11) மேலும், வாதி தரப்பில் கடந்த 29.01.2020 ம் தேதியில் "இந்நிர் வழக்கு தபசில் சொத்தைப் பொறுத்து திருப்பதி மற்றும் 1 ம் பிரதிவாதியான சந்திரபோஸ் மற்றும் 2 ம் பிரதிவாதியான சந்தனக்குமார் 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 03.09.2009 ம் தேதி ஆவண எண்.8157/2009 ன் கீழ் மோசடியாக ஏற்படுத்திய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை

செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படியார்களின் சட்டத்திற்கு புறம்பான மோசடியான நடவடிக்கைகளுக்கு அவர்களது வாரிசுகள் எவ்வகையிலும் தொடர்பு இல்லாததால் தற்போது இவ்வழக்கு நடவடிக்கையில் இறந்துபோன 1ம் பிரதிவாதி சந்திரபோஸின் வாரிசுகள் இவ்வழக்கில் அவசியமற்றவர்கள் என்பதால் அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை" என்று குறிப்பிட்டு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) இந்த வழக்கானது 1, 2 பிரதிவாதிகளால் மோசடியாக வாதியின் தகப்பனாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் அந்த சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது சரியானதா? இல்லையா? என்பதை 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்த்தால் மட்டுமே தெரிய வரும். 1, 2 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் மோசடியானதா? இல்லையா? என்பதைப் பற்றி தெரிவிப்பதற்கு 1ம் பிரதிவாதி உயிருடன் இல்லாத நிலையில் அந்த ஆவணத்தைப் பற்றிய விபரங்களை சொல்வதற்கு 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் இந்த வழக்கைப் பொறுத்து அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சி சேர்க்காத நிலையில் வாதி தரப்பை வைத்து மட்டுமே 1, 2 பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணத்தைப் பற்றி முடிவு செய்ய முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்காததற்காக சொல்லியுள்ள காரணமும் ஏற்புடையதாக இல்லை. வாதி தரப்பில் 1ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்று சொல்லாத நிலையில் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும், இறந்துபோன ஒருவருக்காக அவரது வாரிசுகளோ, அவரைச் சார்ந்தவர்களோ கட்சி செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். அதற்காக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது வாதியின் கடமையாகும். இந்த வழக்கைப் பொறுத்து வாதிக்கு போதுமான அவகாசம் இருந்தும், இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை

கட்சி சேர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்று சீர்திருத்தம் செய்துள்ளதும், மெமோ தாக்கல் செய்துள்ளதும் இந்த வழக்கைப் பொறுத்து ஏற்புடையதாக இல்லை.

14) இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்காமல் இவ்வழக்கில் சரியான தீர்ப்பை எட்ட முடியாது என்று இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கு அவசிய கட்சிகளை கட்சி சேர்க்காத தோஷத்திற்கு ஆட்பட்டுள்ளது என்று முடிவு செய்து, வாதி கோரியுள்ள விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வாதிக்கு வழங்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 03.09.2009 ம் தேதியிட்டு 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பதிவு செய்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1க்கு வாதிக்கு எதிராக விடையளித்தும், 3ம் பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரம் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2க்கு வாதிக்கு எதிராக விடையளித்தும், 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 3க்கு வாதிக்கு எதிராக விடையளித்தும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

15) <u>**எழுவினா 4**</u>:-

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

இந்த வழக்கானது அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்திற்கு ஆட்பட்டுள்ளதால் எழுவினாக்கள் 1, 2, 3க்கு வாதிக்கு எதிராக விடை அளித்துள்ள நிலையிலும், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கின் தன்மை மற்றும் தரப்பினர்கள் கருதி அவரவர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் எழுவினா 4க்கு விடை அளித்து உத்தரவிடுகிறது.

16) இறுதியாக, வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கினை செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து,

1. தபசில் சொத்தைப் பொறுத்தமட்டில் திருப்பதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் 03.09.2009 ம் தேதி 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் கிரைய ஆவண எண்.8157/2009 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் அதனைத் தொடர்ந்த மற்ற நடவடிக்கைகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யுமாறு வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

2. தபசில் சொத்தினைப் பொறுத்து 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் 03.09.2009 ம் தேதி ஆவண எண்.8157/2009 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை 3 ம் பிரதிவாதி ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கும்பொருட்டு கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

3. தபசில் சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ, அவர்தம் வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும், எவ்வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாதென கோரியுள்ள நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:–

வா.சா.1 – ஜெகதீஸ்

வா.சா.2 – முத்துச்சாமி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:–

வா.சா.ஆ.1 – 04.12.2009 செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் அசல்

வா.சா.ஆ.2 – 23.03.1995 ஜெனரல் பவர் பத்திரம் அசல்

வா.சா.ஆ.3 – 23.07.1997 கிரையப்பத்திரம் அசல்

வா.சா.ஆ.4 – 20.08.2010 கெங்கம்மாளின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.5 – 03.09.2009 கிரையப்பத்திரம் நகல்

வா.சா.ஆ.6 – 06.09.2010 கிரையப்பத்திரம் அசல்

வா.சா.ஆ.7 – 07.04.2017 திருப்பதியின் இறப்புச்சான்றிதழ் நகல்

வா.சா.ஆ.8 – 27.11.2017 வில்லங்கச்சான்றிதழ் அசல்

வா.சா.ஆ.9 – 09.12.2017 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது அலுவலக நகல்

வா.சா.ஆ.10 – 09.12.2017 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது அலுவலக நகல்

வா.சா.ஆ.11 – 13.12.2017 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்

வா.சா.ஆ.12 – 21.12.2017 1, 2 பிரதிவாதிகள் அனுப்பிய பதிலறிவிப்பு அசல்

வா.சா.ஆ.13 – 16.06.2017 பட்டா கணினி நகல்

வா.சா.ஆ.14 – 03.02.2018 வழக்கறிஞர் Rejoinder Notice அஞ்சல் ரசீதுடன் அசல்

வா.சா.ஆ.15 – 13.05.2018 அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்

வா.சா.ஆ.16 – 14.03.2003, 03.07.2001, 04.10.2017 தீர்வை ரசீதுகள் எண்ணம் 3 அசல்

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>:– இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
சாத்தூர்,
அ.வ.எண்.58/2019
<u>தீர்ப்புரை</u>
நாள் – 01.02.2024